**தலைப்பு 309 – கட்டிடங்கள் திணைக்களம் - 2024**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 309 - கட்டிடங்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கட்டிடங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டிடங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கட்டிடங்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கட்டிடங்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதி கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 07.11 ஆம் பந்தியின் பிரகாரம் ஏ.சீ.ஏ – 7 படிவத்தில் கட்டுநிதி இணக்கக் கூற்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் ஏனைய நிறுவனங்களினால் அறிக்கையிடப்படுகின்ற நிறுவனத்திற்காக சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா 2,736,616 பிழையாக கட்டுநிதி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி இணக்கக் கூற்றில் ஏனைய நிறுவனங்களுக்காக சேகரிக்கப்பட்ட மொத்த தொகையின் குறைத்தலாக ரூபா 283,424,916 ஆகவும், அந்த சேகரிக்கப்பட்ட தொகையில் மீள செலுத்தப்பட்ட தொகை ரூபா 2,736,616 ஆகவும் இந்த சேகரித்தலாக காண்பிக்கப்பட்டுள்ளது. | ஏ.சீ.ஏ – 7 படிவத்தின் பிரகாரம் கட்டுநிதி இணக்கக் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) நிதி அல்லாச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்திற்கு உரிய 18 காணிகள் மற்றும் 26 கட்டிடங்களுக்காக மதிப்பீட்டு பெறுமதி இன்றியதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் (ACA-6/ SA-82) காண்பிக்கப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி பிழையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்திற்கு உரிய காணி கட்டிடங்கள் கணிசமான அளவில் உள்ளதுடன் இந்த காணி கட்டிடங்கள் யாவும் மதிப்பீடு செய்யப்படவில்லை. இந்த காணி கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்காக நிர்வாகப் பிரிவு செயற்படுவதுடன் இதுவரை மதிப்பீடு செய்யப்பட்ட சகல காணி, கட்டிடங்களின் பெறுமதி எங்களால் சிகாஸ் முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்கு உரிய காணி கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து சகல சொத்துக்களும் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**(இ) கட்டுநிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கட்டுநிதிக் கணக்கு இலக்கம் 67/24 இற்கு உரிய மீளாய்வாண்டின் இறுதியில் தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 1,764,622 ஆகும். நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ -3 படிவத்தில் கட்டுநிதி தீர்க்கப்படாமைக்கான காரணம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதி கணக்கு இலக்கம் 67/24 இன் 2024 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 1,764,622 தொகை பாராளுமன்ற தேர்தலுக்கான தேவையான படிகள் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட முற்பண மீதியை தீர்த்து வைக்காமையின் காரணமாக ஏற்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ – 3 படிவத்தில் கட்டுநிதி தீர்க்காமையின் காரணம் தவறு ஒன்றின் காரணமாக குறிப்பிடுவதற்கு முடியாது இருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏ.சீ.ஏ – 3 படிவத்தில் கட்டுநிதி தீர்க்கப்படாமைக்கான காரணம் காண்பிக்க வேண்டி இருந்ததுடன் தீர்க்கப்படாத கட்டுநிதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை**

திணைக்கத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(i) உத்தியோகபூர்வ இல்லங்களின் காத்திருத்தல் பதிவேடு** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 4.3.3 பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லங்களின் காத்திருத்தல் பதிவேடு ஒன்று நாளதுவரையாகப் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ இல்லங்களின் பதிவேடு சரியாக நாளது வரையாக்கப்பட்டள்ளது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லங்களில் காத்திருத்தல் பதிவேட்டை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது சரியான ஆய்வு உடனும் கவனத்துடனும் இன்றி மதிப்பீடு தயாரித்தன் காரணமாக செலவின விடய இலக்கம் 309-1-1-1304 மற்றும் செலவின விடய இலக்கம் 309-2-2-1703 இற்குரிய மதிப்பீடு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 2,000,000 மற்றும் ரூபா 100,000 நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமையின் காரணமாக மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் எங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த 2023 ஏப்ரல் 28 ஆந் திகதி ICTA/DS/LG/2023/FA/01 என்ற கடிதத்தின் பிரகாரம் சேவைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது நடாத்திச் செல்வதற்காக (Future support after the warranty expires) ஏற்பாடுகள் கோரப்பட்ட போதும் நிறுவனத்தின் மூலம் அவர்களின் சேவைக் காலம் மேலும் மேலும் நீடிக்கப்பட்டதன் காரணமாக 309-1-1-1304 செலவின விடயத்தில் செலுத்துவதற்கு தேவை ஏற்படாது இருந்ததுடன் இரண்டாவது மொழித் தேர்ச்சி பயிற்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு உரிய அளவில் அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை காணப்படாமையினால் 309-2-2-1703 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | சரியான ஆய்வுடன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரிக்க வேண்டி இருந்ததுடன் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை ஆக்க பூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடு தயாரிக்கும் போது உரிய ஆய்வு உடனுடம் கவனத்துடனும் அல்லாமல் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக 04 செலவின விடயங்களில் 55 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையால வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்த உத்தியோகத்தர்கள் போதியளவில் வங்கியில் ஆதனக் கடன் பெற்றுக் கொள்ளல் தொடர்ந்தும் ஆரம்பிக்கப்படாமை மற்றும் 2024 ஆம் ஆண்டின் போது ஆதனக் கடன் பெற்றிருந்த உத்தியோகத்தர்களுக்கு இடையே சிலர் இடமாற்றாகிச் சென்றமை, 2024 ஆம் ஆண்டில் அரச செலவின முகாமைத்துவம் மூலம் வெளிநாட்டு பிரயாண செலவினங்களை உள்ளடக்கிய பல பிரிவுகளின் செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வரையறுக்கப்பட்டமை மற்றும் வலய அலுவலகங்களின் தேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட ஏனைய நிறுவனங்களின் வாகனங்களுக்காக எரிபொருள் மற்றும் ஏனைய சிறு எரிபொருள் தேவை குறைவடைந்தமை இதற்காக காரணமாக இருந்தது. | செலவின விடயங்களுக்காக தேவையான நிதியேற்பாடு சரியாகத் திட்டமிடப்பட்டு இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் செலவின விடய இலக்கம் 309-1-1-1301 மற்றும் 309-2-2-1301 இற்கு உரிய முறையே ரூபா 81,270 மற்றும் ரூபா 300,536 பொறுப்புக்கள் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய வாகனங்களில் சேவை செய்தல் மற்றும் பழுது பார்த்தல் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமையால் உரிய ஆண்டிற்கான நிதியேற்பாடு முடிவடைந்து இருந்த போதிலும் கடமைகளுக்காக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதுடன் தொடர்ச்சியாக வாகனங்களை பழுது பார்க்கும் செலவின விடயங்கள் மேற்கொள்ளப் படுகின்றமையால் இந்தப் பெறுமதி பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக கவனத்தில் கொள்ளப்படவில்லை. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பொறுப்புக்களை சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணக் கோவையின் 94(1) பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகள் நிதியேற்பாடு உள்ளதாயின் அன்றி எந்த ஒரு திணைக்களத்தினாலும் வேலை ஒன்று அல்லது சேவை ஒன்று அல்லது வழங்கல் ஒன்றுக்காக எந்த ஒரு செலவினமோ அல்லது கடப்பாடோ ஏற்படுத்த முடியாமை காண்பிக்கப்பட்ட போதும் உரிய ஆய்வு மற்றும் திட்டமிடல் இன்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையால் செலவின விடய இலக்கம் 309-1-1-1301 இல் சேமிக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 1,527 ஐ விஞ்சி ரூபா 79,743 பொறுப்புக்களுக்கு உட்பட்டு இருந்தது. | தொடர்ச்சியாக சேவை வழங்குகின்ற 309-01-01-1301 நிதியேற்பாட்டை விஞ்சி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்தம் மதிப்பீட்டு நிதியேற்பாடை விஞ்சி பொறுப்புக்களுக்கு உட்பட முடியாது இருந்ததுடன் நிதியேற்பாட்டை விஞ்சுவதற்கு உரிய சட்ட விதிகளின் பிரகாரம் அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

## 3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் ,பிரமானங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| (அ) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாண | - | வாகன சம்பவத் திரட்டு புத்தகம் நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை | வாகன சம்பவத் திரட்டு புத்தகம் நாளது வரையாக்கி விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை பெற்றுக் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்கம் 1645 | | | கொள்ள பட்டதுடன் அதன் பிரகாரம் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 8.8.1 (ஆ) | - | தோல்வி அடைந்த கேள்விதாரர்களுக்கு விசேட குறைபாடுகளைக் காண்பித்து கேள்வி தோல்வி அடைந்தமைக்கு தாக்கமளித்த காரணங்கள் அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. | கேள்வி தோல்வி அடைந்தமைக்கு தாக்கமளித்த காரணங்களை அறிவித்தல் 2025 ஆம் ஆண்டு முதல் அமுல் படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கேள்வி தோல்வி அடைந்தமைக்கு தாக்கமளித்த காரணங்களை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய அரச நிர்வாக அமைச்சு செயலாளரின் இலக்கம் 30/2016 என்ற சுற்றறிக்கை | - | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாதங்கள் காலம் கடந்த பின்னர் அல்லது கிலோமீற்றர் 25,000 ஓடியதன் பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பாக பிரதான பழுது பார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அல்லது இந்த விடயங்களுக்கு இடையே முதலாவது இடம் பெறுகின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்க வில்லை. | இயந்திரப் பிரிவிலும் உதவியுடன் கட்டிடத் திணைக்களத்தின் வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப் படுகின்றது. வாகனங்களைப் பழுது பார்த்து உரிய தூர அளவு பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 வைப்பு மீதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் காலாவதியான சகல வைப்புக்களும் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் இலக்கம் 6000-0-0-16-033 என்ற வைப்புக் கணக்கிற்கு உரிய 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் | சில வைப்பு மீதிகள் நிர்மாணங்களின் குறைபாடுகள் சரி செய்யப்படாமையினால் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முடியாது இருந்தது. நிறுத்தி வைத்தல் பணம் கோரப்படாது | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு வரையான ரூபா 12,140,274 ஆன வைப்புக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இருக்குமாயின் எதிர்காலத்தில் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | நிதிப்பிரமானம் 571(3) இன் பிரகாரம் வைப்பு கணக்கு ஒன்றில் நிச்சயமற்ற வகையில் வைக்கப்பட்டுள்ள பணம் காலாவதியான வைப்பாக கவனத்தில் கொள்வதற்காக இடமளிக்க முடியாத சந்தர்ப்ப சூழ்நிலையின் பிரகாரம் உரிய கணக்கில், அரசாங்கத்திற்க வருமானத்தில் செலவு வைப்பதற்கோ அல்லது கூடிய விரைவில் மீள செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் நிர்மாண செயற்திட்டங்களுக்கான வைப்பாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற ரூபா 31,228,168 தொகை பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | அநேகமான செயற்திட்டங்கள் பல்வேறு காரணங்களினால் பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாமையினால் காலாவதியான வைப்புக்களாக கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாது இருந்தது. மேலும் வருமானத்தில் செலவு வைத்து மீண்டும் விண்ணப்பித்தலை தவிர்க்கும் நோக்கில் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு முன் மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | ஏதாவது நோக்கம் ஒன்றுக்காக வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வைப்புக்கள் உரிய பணி ஒன்றுக்காக ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன் நிதிப்பிரமானத்தின் பிரகாரம் வைப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றக் கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 787 இன் பிரகாரம் சாதாரணமாக அரசாங்கத்தின் சகல நிர்மாணங்கள் மற்றும் வேலைகள் அமுல்படுத்தல் தொடர்பாக அரசாங்க வேலைத் திணைக்களம் அதாவது கட்டிடத் திணைக்களம் பொறுப்பு வாய்ந்ததாகும். இந்த பணிகள் மற்றும் ஏனைய நிர்மாண பணிகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்திற்கு உரிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிர்மாணத் துறைகளுக்கு உரிய சிரேஸ்ட நிலையில் 70 பொறியியலாளர்களும், சிரேஸ்ட நிலைய உள்ளக வீடமைப்பு நிர்மாண கலைஞர்கள் 14 பேரையும் உள்ளடக்கிய திட்டமிடல் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 105 பேர்களை உடைய பதவியணியினர் நியமிக்கப்பட்ட போதும் செயலாற்றல் நலிவான நிலையில் காணப்பட்டது. 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 2018 இன் 23 ஆம் இலக்க கூட்டு உரித்துக்கள் (விசேட ஏற்பாடுகள்) | கூட்டு வீட்டு உரிமைச் சட்டத்தின் செல்லுபடிக் காலம் 2023 ஆகஸ்ட் 18 அந் திகதியில் முடிவடைவதுடன் அந்த காலம் வரை கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் அளவான 2352 இல் 2302 இற்கு சான்றிதழ் வழங்கி உரிய நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் Sonders Place வீடமைப்புத் தொகுதியில் இருந்து மாத்திரம் மூடப்பட்டிருந்த வீடுகளை பரீட்சித்து பூர்த்தி செய்து 50 வீடுகளுக்காக அறிக்கை வழங்குவதற்கு முடியாது இருந்தது. | மிகுதி வீடுகளும் பரிசோதனைக்கு உட்படுத்தி சான்றிதழ் வழங்குவதற்காக விரைவாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சட்டத்தின் 3.(3)(1) உப பிரிவுகளின் பிரகாரம் கூட்டு ஆதனங்களைப் பதிவு செய்வதற்காக பாதுகாப்பு சான்றிதழ் உறுதிப்படுத்தி கட்டித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் கூட்டு ஒன்று அந்த கூட்டுஆதனங்களைப் பதிவு செய்கின்ற சந்தர்ப்பத்தின் போது விநியோகித்தல் வேண்டும். இந்த சட்ட ஆரம்பமாகும் திகதியில் இருந்து ஐந்து வருட கால எல்லைக்காக அமுல்படுத்த வேண்டியிருந்தமை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் மூலம் அறிவிக்கப் பட்டிருந்ததுடன் 2023 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரையில் இந்தக் கால எல்லை முடிவடைந்து இருந்ததுடன் கம்பனியின் ஏற்பாடுகளின் தாமதத்தின் காரணமாக இந்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப் பெறாமை

### (அ) மன்னார் மடு தேவாலய வளவில் யாத்திரிகர்கள் மடம் நிர்மாணிக்கும் செயற்திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மடு யாத்திரிகர்களுக்காக வருகை தருகின்ற பிரமுகர்களுக்கு குறைந்த கிரயத்தில் 300 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2018 நவம்பர் 15 ஆந் திகதி ரூபா 300 மில்லியன் இந்திய அரசின் உதவியின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் ஆலோசனையாளராக கட்டிடங்கள் திணைக்களம் நியமிக்கப்பட்டதுடன் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சு மற்றும் கட்டிடத் திணைக்களத்திற்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்ற வளவில் நீர் தேங்கி நின்று சேற்றுடனான நிலமாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு முன் நிலத்தை பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம் 300 வீட்டு அலகுகளில் 12 வீடுகளை உடைய இரண்டு மாடிக் கட்டிடம் 25 ஆக பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பின்னர் அது தனி வீடாக பூர்த்தி செய்வதற்கு இணங்கியதன் காரணமாக முதலில் வேலை ஆரம்பிக்கப் பட்டிருந்த வீடுகளுக்காக | கட்டிடம் நிர்மாணிக்கப் படுகின்ற நிலத்தில் நீர் தேங்கி நிற்பது தற்காலிகமாக இடம் பெறுகின்ற வசதியீனமாக இருந்ததுடன் வேலைத் தளத்தில் அதிக நீர் வழிந்து ஓடிச் செல்லும் தன்மையில் வீதியில் கட்டிடம் நிர்மாணப் பொருட்கள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் குவிக்கப்பட்டமையால் நெருக்கடி ஏற்பட்டமை இதற்கு ஆடிப்படையாத் தாக்கமளித்து இருந்தது. பூர்த்தி செய்யப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தின் அத்திவாரத்தின் அடிப்படையில் ஒரு மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டமையால் ஏற்படுகின்ற அத்தியாவசியமற்ற செலவினப் பொறுப்பு சேவைப் பங்களிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அவரின் கோரிக்கையின் அடிப்படையில் | நிலத்தைப் பரீட்சித்து அதற்கு பொருத்தமான வகையில் கட்டிடத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைக்கப்பட்ட அத்திவாரத்திற்காக தேவையற்ற செலவினப் பொறுப்பு ஒன்று ஏற்பட்டு இருந்தது. | மேற்கொள்ளப்பட்டது. | |
| (ii) | மூலப்பொருள், இயந்திர உபகரணங்கள் மற்றும் ஊழியம் போதியளவான பிரகாரம் வழங்கப்படாமையினால் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இணங்கிய பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து வழங்குவதற்கு முடியாத நிலையில் காணப்பட்டதாக கட்டங்கள் திணைக்கள சேவை நலனாளிகள் நிறுவனமான உரிய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்மானிக்கப்பட்ட 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தமைக்காக உரிய அறிவித்தல் இந்த திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் (வலயம் 02) இனால் உரிய பிரகாரம் உரிய சகல நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் அதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை இந்த திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அப்பாற்பட்ட நடவடிக்கையாக உள்ளது. | ஒப்பந்தகாரருக்கு அறிவித்து குறித்துரைத்த கால எல்லையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து கொள்வதற்கும் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | பௌதீக பரிசோதனையின் போது வேலைத் தளத்தில் மண் கழுவி தாயாரிக்கப்பட்ட மணல் கட்டிட நிர்மாணத்திற்காகவும் சீமெந்துக் கல் தயாரிப்பதற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | வேலைத் தளத்தில் காணப்படுகின்ற இயற்கையான மண் சேற்றுடன் காணப்படுகின்ற மண் ஆகும். இந்த மண் எதுவும் சீமெந்துக் கல் தயாரிப்பதற்காக மூலப் பொருளாக பயன்படுத்த முடியாது இருந்தது. சீமெந்துக் கல் உற்பத்தி செய்வதற்காக இந்த திணைக்களத்தில் இருந்து அங்கீகரிக்கப்பட்ட ஆற்று மணல் மாத்திரம் பயன் படுத்தப்பட்டுள்ளது. | நியமம் இன்றி நிர்மாணித்தல் பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததா என தினந்தோறும் மேற்பார்வை செய்ய வேண்டி இருந்ததுடன் நிர்மாணங்களின் தரத் தன்மையை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2024 மார்ச் 09 ஆந் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆய்வுகூட ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது நிர்மாணத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட இந்த சேற்றுடன் உள்ள சீமெந்து கல்களின் காணப்பட வேண்டிய அமுக்க சக்தி காணப்படாது இருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்தக் கல்லைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் குறித்துரைத்த நியமம் காணப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | வேலைத் தளத்தில் சுவர் கட்டுவதற்காக சீமெந்து கல் உற்பத்தி செய்யும் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது அதற்கான பொருத்தமான மணல் மற்றும் சீமெந்து கலவை விகிதம் பல வகையில் கலக்கப்பட்டிருந்தது. அதன் போது பரீட்சிக்கப்பட்ட மாதிரியாக கொள்ளப்பட்ட ஒரு கலவையில் அடங்கியிருந்த கல் மாதிரியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் பரீட்சிக்கப்பட்டு தேவையான அமுக்க சக்தி காணப்படாதிருந்தமையால் | நிர்மாணத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட நியமத்தை உடைய சீமெந்துக் கல் பயன் படுத்தப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் ஆய்வுகூடப் பரிசோதனையில் அங்கீகரிக்கப்படாத பொருட்களை ஈடுபடுத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அந்த மாதிரியில் அடங்கியுள்ள கல் யாவும் அகற்றப்பட்டதுடன் கலவை விகிதம் மாற்றப்பட்டு மீண்டும் பரிசோதனை செய்த பின்னர் அதில் சித்தியடைந்த கலவை விகிதத்தில் சீமெந்து கல் உற்பத்தி செய்யப்பட்டதுடன் அந்த கல்லைப் பயன்படுத்தி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. | |
| (v) | பிரதேச செயலாளரின் பங்கு பற்றலுடன் போதியளவான மணல் இருப்பு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டமை அறிவிக்கப்பட்ட போதிலும் அவ்வாறு வழங்கப்பட்ட மணல் இருப்பு இந்த நிர்மாணங்களுக்காக பயன் படுத்தப்படாது இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பிரதேச செயலாளரின் தலைமையில் மணல் அகழ்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும் நிர்மாணத்திற்கு தேவையான அளவில் மணல் வழங்கப் பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக மேலதிகத் தொகை ஒன்று மணல் பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்தகாரருக்கு நிலையான காசுப்பாய்ச்சல் காணப்படாமை இதற்கு காரணமாக இருந்தது. | கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான நியமத்தை உடைய மணலை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது 08 வீடுகளை உடைய கட்டிடங்களில் 04 அலகுகள் லின்டல் மட்டம் வரை சுவர் கட்டப்பட்டு இருந்ததுடன் மிகுதி கட்டிடங்களின் அத்திவாரம் மாத்திரம் அமைக்கப்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2024 திசெம்பர் 05 ஆந் திகதி கணக்காய்வுத் திகதி வரையிலும் முழு நேரமாக ஈடுபடுத்த வேண்டிய பதவியணியினர் மற்றும் பயிற்சி ஊழியர்கள் வேலைத்தளத்தில் ஈடுபடுத்தப்படாது இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதி சார் செயல் முன்னேற்றம் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 23 சதவீதம் மற்றும் 47 சதவீதமாகக் காணப்பட்டது. | காணப்படுகின்ற மோசமான காலநிலைமை மற்றும் குறித்துரைத்த பிரகாரம் மூலப் பொருட்கள் மற்றும் ஊழியர் வேலைத் தளத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்தகாரருக்கு தவறியமை போன்ற விடயங்களின் அடிப்படையில் இந்த வேலைத்தளத்தின் செயல் முன்னேற்றம் குறித்துரைத்த பிரகாரம் காணப்படாது இருந்தமை உண்மையாகும். எனினும் செலுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு அமைச்சின் மூலம் இராணுவ ஊழியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பரிந்துரையுடன் தேவையான நடவடிக்கைகள் இந்த திணைக்களம் மற்றும் அமைச்சின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரர்களை வரவழைத்து நிர்மாணங்களை பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## (ஆ) பனை சார்ந்த பண்ணை ஒன்றை நிர்மாணிக்கும் செயற்றிட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பனைக் கைத்தொழிலை விரிவாக்கி சுற்றுலா நிலையம் ஒன்றாக பயன்படுத்துவதற்கும், பனை சார்ந்த பண்ணை ஒன்றை விவசாயப் பண்ணை ஒன்றை நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை ஆலோசனை நிறுவனமாக 2021 மார்ச் 31 ஆந் திகதி கட்டிடங்கள் திணைக்களம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தை நிர்மாணிப்பதற்குரிய பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 18,029,000 ஆக இருந்த போதும் செயற்றிட்டத்திற்காக கேள்வி கோரல் பத்திரிகை அறிவித்தலில் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 23 மில்லியன் ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பொறியியலாளர் மதிப்பீட்டின் பிரகாரம் செயற்றிட்டத்திற்கான வேலைப் பெறுமதி ரூபா 18,029,000 ஆகும். அதன் மொத்தக் கிரய மதிப்பீடு (நிச்சயமற்ற ஒதுக்கீடுகள் போன்றவை உள்ளடக்கி) ரூபா 22,999,000 ஆகும். பத்திரிகை அறிவித்தலில் தவறுதலாக ரூபா 23 மில்லியன் ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த தவறினைத் தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கேள்வி கோரும் போது செயற்றிட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி சரியாக மற்றும் பரீட்சித்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கேள்விதாரர்கள் இருவர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்து இருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரின் கேள்விப் பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டினை விட 21.75 சதவீதத்தால் அதிகரித்து இருந்த போதிலும் பின்னர் கலந்துரையாடி அந்த மாற்றங்கள் அந்த வேறுபாடுகள் 9.58 சதவீதம் வரை குறைத்துக் கொள்ளப்பட்டதுடன் புதிய ஒப்பந்தப் பெறுமதி ரூபா 19,756,132 ஆகும். 2021 யூலை 26 ஆம் திகதி பிரதான பொறியியலாளர் வலைய இலக்கம் 06 இனால் பணிப்பாளர் (பொறியியல் திட்டமிடல்) இனால் கட்டிடக் கலை மற்றும் கட்டமைப்பு, இலத்திரனியல் மற்றும் நீர் வழங்கலுக்காக திட்டம் ஒன்றை வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதும் 2021 நவம்பர் 03 ஆந் திகதி வரையிலும் உரிய திட்டம் வழங்கப்படாமையின் காரணமாக செயற்றிட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் ஒப்பந்தகாரருக்கு வேலையை ஆரம்பிக்க முடியும். அதன் பிரகாரம் உரிய காலத்தில் ஒப்பந்தகாரர் வேலையை ஆரம்பித்திருந்தார். 2021 நவம்பர் 03 ஆந் திகதி வரையில் சில திட்டங்கள் கிடைக்காயினால் வேலை ஆரம்பிப்பதற்கு இடையூறாகக் காணப்பட வில்லை. மின்சார பொறியியலாளர் திட்டம் போன்றவை தற்போது செயற்திட்ட வேலை ஆரம்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் தேவை இல்லாது இருந்ததுடன் அந்த திட்டங்கள் உரிய காலத்தின் போது விநியோகித்தல் சாதாரண நடைமுறையாகும். | செயற்றிட்டத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான பொறியியலாளர் திட்டம் குறித்துரைத்த தினங்களில் தாமதம் இன்றி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2021 நவம்பர் 23 ஆம் திகதி திணைக்களம் மற்றும் ஒப்பந்தகாரருக்கு இடையே உடன்படிக்கை கையொப்பம் இடப்பட்டிருந்த போதிலும் கையளித்தல் கடிதத்தின் பிரதகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன் செயலாற்றல் காப்புறுதி சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் | உடன்படிக்கை எகையொப்பம் இடுவதற்கு முன் செயலாற்றல் பிணை ஒன்று ஒப்பந்தகாரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத் திகதியில் உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு தேவையான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையினாலும், | உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன் சரியான செயலாற்றல் காப்புறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கொரோனா தொற்று நோய் நேரத்தில் உத்தியோகத்தர்களின் வருகையும் வரையறுக்கப்பட்டிருந்தமையா லும் உடன்படிக்கை கைச்சாத்திடல், வழுக்கள் உடனான முதலாவது செயலாற்றல் பிணைமுறி வழங்கப்பட்ட திகதியில் மேற்கொள்ளப் பட்டிருந்தது. குறைபாடுகள் சரி செய்யப்பட்ட செயலாற்றல் பிணைமுறி 2021 திசெம்பர் 15 ஆந் திகதி எங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | |
| (iv) | 2022 யூலை 12 ஆந் திகதி முதல் ஒப்பந்தகாரர் செயற்திட்ட நிர்மாணத்தை கைவிட்டு இருந்ததுடன் 2022 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் நிர்மாண செயல் முன்னேற்றம் 30 சதவீதமாக இருந்ததாக வலைய இலக்கம் 06 இன் பிரதான பொறியியலாளரால் அறிக்கையிடப்பட்டிருந்தது. அது வரையில் செயற்திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட வேலைப் பெறுமதி ரூபா 4,964,868 ஆக காணப்பட்டமையும் மீண்டும் பெறுகை நடைமுறைகளின் பின்னர் புதிய ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்து செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக இலக்கம் 2-3-14-382 மற்றும் 2022 ஒக்தோபர் 19 ஆம் திகதிய கட்டிட பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் 2024 செப்தெம்பர் 02 ஆம் திகதி வரையும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரர் வேலையைக் கைவிட்டுச் சென்ற பின்னர் (termination) மிகுதி வேலைகளுக்காக புதிய ஒப்பந்தம் ஒன்று தயாரித்து அந்த மதிப்பீட்டுக்கு அங்கீகாரம் மற்றும் மிகுதி நிதியேற்பாடுகள் விடுவிக்குமாறு சேவைப் பங்களிப்பு நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக இந்த கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் சேவை பங்களிப்பு நிறுவனத்தில் இருந்து உரிய பதில் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே அது வரையில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களைப் பாதுகாப்பதற்காக மாத்திரம் மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்ட போதும் அதற்காகவும் அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. அதனால் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. | புதிய ஒப்பந்தகாரர் தெரிவு செய்து செயற்திட்ட நிர்மாணங்களை மீண்டும் ஆரம்பித்து ஏற்பட்ட நட்டத்தைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் கையில் எஞ்சியிருந்த நிதியாக ரூபா 12,677,762 தொகை காணப்பட்டதுடன் அந்த தொகை கணக்காய்வுத் திகதியான 2024 செப்தெம்பர் 02 ஆந் திகதி வரையும் திணைக்களத்தின் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த பணம் ஏனைய செயற்திட்டங்கள் இரண்டு இனது நிலுவைப் பணத்தை தீர்த்து வைக்கும் வகையில் சேவைப் பங்களிப்பு நிறுவனத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது. | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை தாமதம் இன்றி ஆக்கபூர்வமான உரிய செயற் திட்டத்திற்கோ அல்லது சட்ட விதிகளின் கீழ் இணங்க ஏனைய செயற்திட்டத்திற்கு ஈடுபடுத்துவதற்கோ |

நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**(இ) கொழும்பு நகர மோட்டார் போக்குவரத்து கட்டிடம் நிர்மாண செயற்திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | அமைச்சரவைப் பத்திர இலக்கம் 16/1676/702/003-XXVII மற்றும் 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மாண இலக்கம் 10/08/2016/10 இன் மூலம் இலங்கைப் பொலிஸ் இன் கட்டிட நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களின் ஒரு பகுதி ஒன்று கட்டிடத் திணைக்களத்திற்கு கையளித்தலின் கீழ் நகர போக்குவரத்து கட்டிட நிர்மாண செயற்திட்டத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாணத்திற்கான மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 376,587,327 ஆகும். தேசிய போட்டியாளர் கோரும் திட்டத்தின் அடிப்படையில் இந்த பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் ஒரு ஒப்பந்தகார நிறுவனம் மாத்திரம் ரூபா 416,589,070 கேள்வி ஒன்றை சமர்ப்பித்து இருந்தது. 2017 மார்ச் மாதத்தில் ஒப்பந்தகாரருடன் பெறுகைக் குழு கலந்துரையாடி இருந்ததுடன் கேள்வி சமர்ப்பிப்பதற்காக தகைமைகள் பெறும் அளவு கோலொன்றாக C2 தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையாக இருந்ததுடன் அது ஒப்பந்தம் கையளித்த சந்தர்ப்பத்தின் போது செல்லுபடியாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த நிறுவனத்திற்கு உரிய CS 2 தரம் 2017 பெப்ரவரி 18 வரை மாத்திரம் செல்லுபடியாக இருந்ததாக தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டம் ஒப்பந்தகாரருக்கு கையளித்தது. மேற்குறித்த தகைமைகள் செல்லுபடியாக காலத்தை விஞ்சிய 2017 செப்தெம்பர் 15 ஆம் திகதி ஆகும். எனினும் ரூபா 376 மில்லியன் ஒப்பந்த பெறுமதி உடைய இந்த செயற்திட்டம் | இந்தக் கேள்வி கோரல் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் கேள்வி மதிப்பீடு அமைச்சு நியமித்த தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அந்த கேள்வி கையளித்தல் அமைச்சு பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையிலும் அமைச்சு செயலாளரின் அங்கீகரத்தின் கீழும் உரிய கேள்விதாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை அல்லது பெறுகை அங்கீகாரத்தில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக விசாரணை ஒன்று தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மேற்கொள்வதற்கு கட்டிடங்கள் பணிப்பாளர் நாயத்திற்கு அதிகாரம் கையளிக்கப்பட வில்லை. அதனால் தொழில் நுட்ப மதிப்பீக் குழுவின் பரிந்துரை தொடர்பான பிரச்சனைகள் அது தொடர்பாக விசாரணை செய்வதற்கும் மற்றும் அதனை நியமிப்பதற்கும், நியமித்தலை மேற்கொண்ட அமைச்சுக்கு அனுப்புதல் பொருத்தமானதாகும். | கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட அளவு கோல்கள் மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்த ஒப்பந்தகாரருக்கு மாத்திரம் நிர்மாண செயற்திட்டங்களில் கையளிக்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்திற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவின் மூலம் ஆகக் குறைந்த தகைமைகளை பூர்த்தி செய்யாது இருந்த மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரருக்கு கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | | |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.12.2 இன் பிரகாரம் சமமான ஒப்பந்தம் தொடர்பாக கேள்விதாரர்களின் அனுபவம் மற்றும் கடந்த கால செயலாற்றல், நிதி வளம் மற்றும் உடன்படிக்கை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கான கேள்விதாரருக்கு உள்ள இயலுமை மற்றும் வளங்கள் முழுமையாக தகைமைகள் பரீட்சிக்கும் அளவு கோல்களாக காண்பிக்கப்பட்ட போதும் அந்த கேள்வி மதிப்பீட்டு செயற்பாடுகளின் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.12.2 இன் பிரகாரம் உடன்படிக்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்காக கேள்விதாரருக்கு உள்ள இயலுமை மற்றும் வளங்கள் தொடர்பாக முழுமையான தகைமைகளை பரீட்சிக்கும் அளவு கோல்களாக காண்பிக்கப்பட்டிருந்த கேள்விதாரரின் அனுபவம் மற்றும் கடந்த கால செயலாற்றல், நிதி வளம் போன்றவை பரீட்சித்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலமாகும். அமைச்சின் மூலம் இந்த பணிகளுக்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு வினவுவதற்கோ அல்லது அது தொடர்பாக தீர்மானம் தொடர்பான விளக்கமளிப்பதற்கோ அதிகாரம் கட்டிடங்கள் பணிப்பாளர் நாயத்திற்கு காணப்படவில்லை. அதனால் அது தொடர்பான அதிகாரம் உள்ள நிறுவனத்திற்கு இந்த பிரச்சனைகள் அனுப்பப்படுவதாக கட்டிடத் திணைக்களத்தின் நம்பிக்கையான உள்ளது. | ஒப்பந்தம் கையளிக்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்தகாரரின் முழுமையான தகைமைகளை பரீட்சிக்கும் அளவு கோல்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2020 பெப்ரவரி 20 ஆந் திகதிய பிரதான பொறியியலாளர் மேற்கு இனால் ஆலோசனையாளர் முகவரியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் slab, beams, columns, lift wall இற்காக அங்கீகாரம் இன்றி ஏனைய வகையின் Steel bars பயன்படுத்தப்பட்டதுடன் அதுவரையில் ஏழாவது மாடியின் கொங்கிரீட் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. வேலை செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்துடன் 25mm bars உம் பழைய இருப்பாக இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. அங்கீகாரம் இன்றி இரும்புக் கம்பிகள் பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடத்தின் தரம் மற்றும் இருப்பு தொடர்பாக | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தின் பொறியியல் ஆலோசனையின் படி அங்கீகரிக்கப்பட்ட வகையில் கம்பிகள் பயன்படுத்த வேண்டி இருந்ததுடன் ஒப்பந்தத்தின் செயற்திட்டத்தின் முகாமைத்துவம் மாத்திரம் கட்டிடங்கள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. செயற்திட்ட பொறியியலாளரின் தகைமைகள் உரிய பிரகாரம் இல்லாத வகையில் செயற்திட்ட முகாமைத்துவமாக முகாமையாளராக கட்டிடத் திணைக்களத்தினால் அவதானிக்கப்பட்டமையால் உரிய கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. ஏழாவது மாடி வரை நிர்மாணிப்பதற்காக | நியமம் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வகையின் இரும்பு கம்பிகளை பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தது. | பொறியியலாளரால் சான்றுபடுத்தப்பட்ட கம்பிகள் ஒப்பந்தகாரால் பயன்படுத்தப்பட்டதுடன் ஏழாவது மாடியின் மேல் மாடிக்காக இன்னுமொரு வகையான கம்பி பயன்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டமையால் அந்த இடத்தில் கொங்கிரீட் இடுவதற்கு முன் உரிய கடிதம் விநியோகிகப்பட்டிருந்த கம்பி உரிய நியமத்தை உடையதாக இருந்தமை உறுதிப்படுத்திக் கொள்ளல் உரிய கடிதத்தின் நோக்கமாக இருந்தது. வேலைத் தளத்தில் காணப்பட்ட செயற்திட்டத்திற்கான மாதாந்தக் கூடத்தின் போது உரிய கம்பி வகைகள் உரிய நியமத்தை உடையதாக இருந்தமையால் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட கம்பி மாத்திரம் கட்டிடத்தின் எல்லா இடங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. கட்டிட நிர்மாணத்தின் நியமத்தின் குறைவான தரம் நியமத்தில் குறைவு ஏற்படவில்லை. |

### 4.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களின் மூலம் கட்டிடத் திணைக்களத்திற்கு கடந்த 04 வருட கால எல்லையில் கையளிக்கப்பட்ட ரூபா 1,282 மில்லியன் ஆன 03 நிர்மாண ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டதுடன் நிர்மாண செயல் முன்னேற்றம் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | கனிஸ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதும் சேவை நலனாளிகள் நிறுவனம் செயற்திட்டத்தின் விடயப்பரப்பில் செயற்திட்டம் கையளித்து அதன் பின்னர் ஆரம்பத்தின் போது மாற்றங்கள் மேற்கொள்வதற்கு முயற்சி எடுத்தமை, ஆலோசனை நிறுவனத்திற்கு இலங்கைப் பொலிஸ் மூலம் செலுத்தல் தாமதம் அடைந்தமையால் ஆலோசனையாளர் இல்லாமல் இருந்தமமை, தொற்றுநோய், பொருளாதார நெருக்கடியின் அடிப்படையிலும் மடு தேவாலயத்தின் யாத்திரிகர்கள் மடம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2020 யூலை 22 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட போது கொவிட் தொற்று நோய், பொருளாதார நெருக்கடி மற்றும் சேவைப் பங்களிப்பு நிறுவனத்தின் மூலம் செயற்திட்டத்தை ஆரம்பித்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட விடயப் பரப்பின் மாற்றங்கள் போன்ற விடயங்களின் காரணமாகவும் | நிர்மாண செயற்திட்டத்தை தாமதம் இன்றி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் தாமதத்திற்கான காரணங்களை கண்டறிந்து உரிய சரி செய்தல்கள் தாமதம் இன்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மட்டக்களப்பு பொது நூலகக் கட்டிடம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 345 மில்லியன் தொகையில் ரூபா 200 மில்லியன் மாத்திரம் ஆரம்பத்தில் கிடைத்திருந்ததுடன் மிகுதித் தொகை உரிய காலத்தில் கிடைக்காமையின் காரணமாகவும் செயற்திட்ட வேலைகள் தாமதம் அடைந்து இருந்தது. | |

### 4.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 10(02) பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(02) பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 வரை செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 இன் செயலாற்றல் அறிக்கை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) நுவரெலியா சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியின் ஒரு பகுதி அனுமதியற்ற நபர்களினால் கைபற்றப்பட்டிருந்ததுடன் அந்த காணியின் அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு உரித்து உறுதி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நில அளவையாளர் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட 2024 நவம்பர் 08 ஆந் திகதிய குறைநிரப்பு காணி விபர பட்டியல் மற்றும் மூ.பி.நூ. 2801 என்ற வரைபடம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2025 ஏப்ரல் 05 ஆம் திகதி கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தால் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்புத் துறை செயலாளர் மூலம் பரிந்துரையுடன் பிரதேச செயலாளர் நுவரெலியா இற்கு காணியை கையளிக்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை அமைச்சு செயலாளர் மூலம் 2025 ஏப்ரல் 28 ஆந் திகதிய பிரதேச | காணி அளவிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு உரித்து உறுதியைப் பெற்றுக் கொள்வதற்கும் அனுமதியற்ற நபர்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ii) | திணைக்களத்திற்கு உரிய தியத்தலாவ காணி பிரதேச செயலகத்தால் கையேற்கப்பட்டுள்ளதுடன் அதற்குப் பதிலாக ஹப்புத்தலை இக்பன்ஆர பிரதேசத்தின் காணி ஒன்றை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும் உரித்து உறுதி பெற்றுக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | ஹப்புத்தளை, ஜயமினிபுரகம கிராம சேகவர் பிரிவில் இக்பன்வெவ பத்தன என்ற பெயருடைய காணியின் பகுதி கட்டிடங்கள் திணைக்களத்திற்கு கையேற்றல் தொடர்பாக காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு ஹப்புத்தளை பிரதேச செயலாளரால் தேவையான பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளமையால் கையேற்றலை துரிதப்படுத்துமாறு காணி ஆணையாளருக்கு 2024 ஆகஸ்ட் 27 ஆந் திகதி கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. | உரிய பிரகாரம் உரித்து உறுதியைப் பெற்று உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.6 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **அரசாங்க உத்தியோகத்தர்களின் நிலுவை முற்பண மீதி** | | |
| (i) | 2017 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது ஓய்வு பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 115,861 மற்றும் ரூபா 151,215 கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 115,861 நிலுவைக் கடன் மீதி ஓய்வூதிய பணிக் கொடையில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுவதற்கான அங்கீகாரத்திற்காக அரச நிர்வாக அமைச்சு இற்கு அனுப்புவதற்காக நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டள்ளது.<br><br>ஓய்வூதிய உத்தியோகத்தர் மரணமடைந்து இருந்தமையால் அறவிட வேண்டிய ரூபா 151,215 கடன் மீதி ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பி மரணப் பணிக் கொடையில் இருந்து அறவிடுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. அவ்வாறு இல்லையாயின் அந்த கடன் தொகையை அரச நிதி சுற்றறிக்கை 01/2024 ஆலோசனையின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 ஆம் ஆண்டின் போது மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 226,987 கடன் மீதி அறவிட வேண்டி இருந்தது. | 2021 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர் மரணமடையும் போது அவரிடம் இருந்து அறவிட வேண்டியதாக ரூபா 226,987 நிலுவைக் கடன் மீதி காணப்பட்டதுடன் அறவிடுவதற்கு இதுவரை திட்டம் ஒன்று காணப்படாது இருந்தமையால் அவரின் பிணையாளரிடம் இருந்து மாதாந்தம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் மாதாந்தம் அறவிடப்பட்ட கடன் தொகையில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி மீதி ரூபா 144,488 ஆக இருந்ததுடன் 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையில் ரூபா 136,998 மேலும் அறவிட வேண்டி இருந்தது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து நிலுவைக் கடன் மீதியை பிணையாளரிடம் இருந்தேனும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2023 ஆம் ஆண்டின் போது வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 330,234 கடன் மீதியை அறவிட வேண்டிக் காணப்பட்ட போதும் அந்த கடன் மீதியை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரினால் பெறப்பட்டிருந்த கடன் தொகையை செலுத்துமாறு பல தடவைகளில் அறிவிக்கப்பட்டிருந்தது. அறவிடும் நடவடிக்கைகள் முடிவடையாது இருந்தமையால் மிகுதி நடவடிக்கைகளுக்காக அனுப்பியமை பிரச்சனைக்கு உரிய நிலைமையில் இருந்தது. | பரிசோதனை நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 வாகனங்கள் குத்தகைக் காலம் முடிவடைந்து இருந்த போதும் திணைக்களத்திற்கு உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான உரித்தை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விரைவாக அந்த வாகனங்களுக்கான உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 2030 ஆம் ஆண்டு வரையில் உலக வலு சக்தி மூலத்தின் புதுப்பிக்கத்தக்க வலு சக்தி பகுதி கட்டியெழுப்பும் நோக்காகக் கொண்டு புதிதாக நிர்மாணிப்படுகின்ற | கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் போது சுகாதார அமைச்சின் கோரிக்கையின் படி பெறுமதி ரூபா 3,500 மில்லியன் அளவான செயற்திட்டம் மூலம் அரசாங்கத்தின் 46 வைத்தியசாலைகள் சூரிய கலங்களைப் பொருத்துவதற்காக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை குறித்துரைத்த ரீதியில் இனங்காண்பதற்கும் அதன் பிரகாரம் இலக்கினை நிர்ணயிப்பதற்கும் திட்டங்களைத் தயாரிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| மற்றும் நவீன மயப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் சகல கட்டிடங்களிலும் சூரிய வலுவைப் பயன்படுத்தி புதுப்பிக்கப்பட்ட வலு சக்தி உற்பத்தி செய்கின்ற வசதிகளுக்கிடையே அந்த வலு சக்தி தேவையில் 25 சதவீதத்தை பூர்த்தி செய்து கொள்வதற்காக புதுப்பிக்கத்தக்க வலு சக்தி மூலமாக சூரிய வலு சக்தி பயன்படுத்துதல், அதன் மூலம் உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களின் வலு சக்தி தேவையில் ஒரு பகுதியை பூர்த்தி செய்து கொள்ளல் தொடர்பாக சேவைப் பங்களிப்பு நிறுவனத்திற்கு அறிவித்தல் மற்றும் சூரிய பனல்களை ஸ்தாபிக்கும் வசதிகள் மற்றும் இட வசதிகளை விரிவுபடுத்துதல், ஆரம்ப கட்டிட திட்டத்தின் கட்டாய பிரிவு ஒன்றாக குறிகாட்டிகளைத் தயாரித்தல் மற்றும் அரசாங்கத்தின் சகல கட்டடங்களின் வலு சக்தி தேவையில் எந்த ஒரு சூரிய வலு சக்தியைப் பயன்படுத்துதலை பூர்த்தி செய்ய வேண்டி இருந்தது. சட்டங்கள், பிரமாணங்களை விதிப்பதற்கும் அடிப்படையில் பங்களிப்பு வழங்குகின்ற செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகளை உள்ளடக்கிய திட்டம் மற்றும் கேள்வி ஆவணங்கள் பூர்த்தி செய்து வழங்குதல் கட்டிடங்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தின் கேள்வி கோரல் சுகாதார அமைச்சினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 154 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையின் பிரகாரம் பதவி எண்ணிக்கைகளை திருத்துவதற்கோ திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | கட்டிடங்கள் திணைக்களத்தில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற பதவிகளுக்காக அந்த பதவிகளை நிரப்புமாறு அறிவித்து அது தொடர்பாக அறிவிக்க வேண்டியுள்ள நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதுவரை உரிய நிறுவனத்தில் இருந்து வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாது இருந்ததுடன் ஆரம்ப தரத்தில் சில பதவிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு புதிய பதவியணியினர் முகாமைத்து சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் DMS/C/8/20/1 மற்றும் 2012 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய கடிதம் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் பிரதமரின் செயலாளரின் இலக்கம் MUDH/HC/AD/103-1 மற்றும் 2025 மார்ச் 27 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் இந்த திணைக்களத்தின் சேவை தேவையின் அடிப்படையில் நிரப்ப வேண்டி இருந்த வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கோ தேவையின் பிரகாரம் பதவிகளின் எண்ணிகையை திருத்தி பதவியணியினரை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |